முருகப்பெருமான் துணை

**மகான் மாணிக்கவாசகர் அருளிய துல்லிய ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**02.04.2024**, செவ்வாய்கிழமை

1. வள்ளலே ஆறுமுக அரங்கனே
 வரம்தரும் ஞான தேசிகனே
 அல்லல் போக்கிக் காத்தருளும்
 அண்ணலே ஆறுமுக ஞானியே
2. ஞானியே உன்பெருமை கூறி
 ஞாலமதில் சோபகிருது சேல் திங்கள்
 இனிமைபட இருபான்திகதி குசன் வாரம்
 (சோபகிருது வருடம் பங்குனி மாதம் 20 ம் நாள், 02.04.2024, செவ்வாய்கிழமை)
 இயம்பிடுவேன் துல்லிய ஆசிதனை
3. ஆசிதனை மாணிக்கவாசகர் யானும்
 அருளுவேன் உலகநலம் காண
 வாசிவென்ற ஞானிகள் படை
 வையகம் எங்கிலும் நிரம்பவே
4. நிரம்பவே அரங்கமகா ஞானியும்
 நிலவுலகம் எங்கிலும் சன்மார்க்க
 வரம்பிலா உயர்நெறி முறைகளை
 வல்லமைபட மக்களுக்கு அருளிவர
5. அருளிவர உலகோர்தானும் ஏற்று
 அரங்கமகானை குருவாய் ஏற்று
 வரம்தரும் வண்ணம் தீட்சையை
 வள்ளல் பெருமான் கரம்பட ஏற்று
6. ஏற்றுமே கடைப்பிடித்து வர
 எந்நாளும் செபதபமாக மக்கள்
 ஆற்றல்மிகு ஞானிகள் பேரில் செய்ய
 அறிவிப்பேன் ஞானிகள் ஆசிபலம்
7. ஆசிபலம் ஆற்றலாகக் கிட்டி
 ஆன்ம ஞாலபலம் அடைவதுடன்
 வாசிவசம் ஆகும் வண்ணம்
 வல்லமைபட மாற்றங்கள் கூடி

8. கூடியே தேககசுத்தி ஆன்ம சுத்தி
குருவருள் வழியாக சுத்தி கண்டு
நாடிடும் வாசிவசம் சகலதும்
ஞானபண்டிதன் ஆசிபட மக்களுக்கு
9. மக்களுக்கு மகா சூட்சுமம் விளங்கி
மண்ணுலகை காக்கின்ற வண்ணம்
ஆக்கமுடன் அறச் சேவைகளில்
ஆற்றல்பட இறங்கி இனிதே
10. இனிதே தயவை காட்டுகின்றபடி
எங்கும் தரும சேவை பரவி
கனிவேலவன் இறங்கி அருளும்படி
கருணையாக வெளிப்பாடு உருவாகி
11. உருவாகி உலகை மாற்றுகின்ற
உயர்வான ஞானத் தலைமையும்
உருவாகி ஞான ஆட்சி மலரும்
உரைத்திட்ட துல்லிய ஆசி முற்றே

—சுபம்—